22.06.2026 18.10hrs

வணக்கம்

ஆகாஷ்வாணி-புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர் : சரவணகுமார்

தேதி : 22.06.2026 – திங்கட்கிழமை நேரம் : மாலை 6.10 மணி

---

*தலைப்புச் செய்திகள்*

பிரிக்ஸ் நாடுகளின் தேசிய பாதுகாப்பு ஆலோசகர்களுக்கு இடையிலான 2 நாள் கூட்டம், புதுடெல்லியில் இன்று தொடங்கி உள்ளது.

தேசிய வேளாண் கூட்டுறவு விற்பனைக் கூட்டமைப்பின், ஏல நடைமுறைகளுக்கான இணையதளத்தை, மத்திய அமைச்சர் திரு. அமித் ஷா, நாளை தொடக்கி வைக்கிறார்.

மேகதாதுவில் அணை கட்ட கர்நாடக அரசு முயல்வது குறித்து, தமிழக சட்டமன்றத்தில் இன்று விவாதம் மேற்கொள்ளப்பட்டது.

காரைக்கால் திருநள்ளாற்றில், முதியோர்களுக்கு, போர்வை மற்றும் காலணி வழங்கும் பணிகளை, மாநில அமைச்சர் திரு. G.N.S ராஜசேகரன், இன்று தொடக்கி வைத்தார்.

*பிரிக்ஸ் கூட்டம் -1 (3)*

பிரிக்ஸ் நாடுகளின் தேசிய பாதுகாப்பு ஆலோசகர்களுக்கு இடையிலான 2 நாள் கூட்டம், புதுடெல்லியில் இன்று தொடங்கி உள்ளது. இக்கூட்டம் குறித்து, கூடுதல் விவரங்கள்…

(வாய்ஸ்)

பிரிக்ஸ் கூட்டம்-2 (13)

(வாய்ஸ்)

தேசிய பாதுகாப்பு ஆலோசகர் திரு. அஜீத் தோவல் தலைமையிலான பிரிக்ஸ் கூட்டத்தில், 11 பிரிக்ஸ் உறுப்பு நாடுகள் பங்கேற்றுள்ளன. உலகின் முன்னுள்ள மரபு சாரா பாதுகாப்பு சாவல்கள் என்ற கருப்பொருள் அடிப்படையில் முக்கிய விவாதங்கள் இடம் பெறுகின்றன. குறிப்பாக, சைபர் பாதுகாப்பு மற்றும் AI மூலமான பாதுகாப்பு அச்சுறுத்தல்கள் குறித்து, இக்கூட்டத்தில் விவாதிக்கப் படுகிறது. தீவிரவாத எதிர்ப்பு மற்றும், பாதுகாப்பிற்கான தகவல் தொழில்நுட்பங்கள் குறித்து, பிரிக்ஸ் நாடுகளுக்கு இடையே அண்மையில் நடைபெற்ற , கூட்டு பணிக்குழுக் கூட்டங்களின் முடிவுகள் குறித்தும், இன்றைய கூட்டத்தில் மறு ஆய்வு செய்யப்படுகிறது. ஆரம்பத்தில் பொருளாதார ஒத்துழைப்பை நோக்கமாகக் கொண்டு உருவாக்கப்பட்ட பிரிக்ஸ் கூட்டமைப்பில், தற்போது, பாதுகாப்பு ஒத்துழைப்பு, நிதிக் கூட்டாண்மை, மற்றும் மக்கள் நிலையிலான பரிமாற்றங்களுக்கும் முக்கியத்துவம் அளிக்கப்படுகிறது.

*மோடி – கட்டுரை (15)*

நாட்டின் சட்டக் கட்டமைப்பை வலுப்படுத்தி, நீதியும் அரசின் இதர சேவைகளும், மக்களுக்கு எளிதில் கிடைப்பதை உறுதிப்படுத்த, அரசு மேற்கொண்டுள்ள பல்வேறு முயற்சிகள் குறித்து, மத்திய சட்டத்துறை அமைச்சர் திரு. அர்ஜுன் ராம் மேக்வால் எழுதிய கட்டுரை ஒன்றை, பிரதமர் திரு. நரேந்திர மோடி, சமூக ஊடகத்தில் பகிர்ந்து கொண்டுள்ளார். தொலைநிலை சட்டம், நியாய பந்து போன்ற அரசின் சேவைகளால், மக்களுக்கு குறைந்த செலவில், விரைந்து நீதி கிடைக்க, இயன்றுள்ளதாக,

அமைச்சர் திரு. மேக்வால் தமது கட்டுரையில் கூறியுள்ளார். சட்டம் மற்றும் நீதித்துறையில், டிஜிட்டல் மற்றும் இதர கட்டமைப்பு வசதிகள் மேம்படுத்தப் பட்டுள்ளதால், வழக்கறிஞர்கள் மற்றும் நீதிபதிகளின் பணி எளிதாகி இருப்பதாக அவர் தெரிவித்துள்ளார். மெய்நிகர் நீதிமன்றம் போன்ற வசதிகளால், நீதித்துறையின் சேவைகளை நேரடியாக மக்களிடம் எடுத்துச் செல்ல முடிவதாக அமைச்சர் கூறியுள்ளார். நீதி மன்றத் தீர்ப்புகள், தற்போது, செயற்கை நுண்ணறிவு மூலம் 18 இந்திய மொழிகளில், மொழிபெயர்த்து வழங்கப்படுவதையும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

*அமித் ஷா (16)*

மத்திய உள்துறை மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் திரு. அமித் ஷா, நாளை புதுடெல்லியில், தேசிய வேளாண் கூட்டுறவு விற்பனைக் கூட்டமைப்பின், ஏல நடைமுறைகளுக்கான இணையதளத்தை தொடக்கி வைக்கிறார். வேளாண் விளை பொருட்களின் ஏலத்தில், வெளிப்படைத் தன்மை, மற்றும் செயல்திறனை மேம்படுத்துவதில், முக்கிய நடவடிக்கையாக இந்த இணையதளம் அமையும் என அரசு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. விவசாயிகளுக்கு மட்டுமின்றி, கூட்டமைப்பில் இடம் பெற்றுள்ள அமைப்புகள், மற்றும், சம்பந்தப்பட்ட அனைத்துத் தரப்பினருக்கும் தேவையான எல்லாத் தகவல்களும் இந்த இணையதளத்தில் இடம்பெறும். தேசிய வேளாண் கூட்டுறவு விற்பனை கூட்டமைப்புச் சார்பில், விவசாயிகளை மையமாகக் கொண்ட, வேறுபல டிஜிட்டல் முன் முயற்சிகளையும், மத்திய அமைச்சர் திரு. அமித் ஷா, நாளை இவ்விழாவின் போது தொடக்கி வைக்கிறார். விவசாயிகளின் குழந்தைகளுக்கான நாஃபெட் – கல்யாண் கல்வி உதவித் தொகைத்

திட்டமும், பயறு வகைகள் மற்றும் எண்ணெய் வித்துக்களின் கையிருப்பை திறம்பட்ட முறையில் நிர்வகிப்பதற்கான திருஷ்டி இணையதளமும் இதில் அடங்கும்.

*கட்டிடம் (12)*

மத்திய உள்துறை இணையமைச்சர் திரு. பந்தி சஞ்சய் குமார், இன்று புதுடெல்லியில், மத்திய தொழிலக பாதுகாப்புப் படைக்கு, தலைமையக கட்டிடம் கட்டும் பணிகளை, மெய்நிகர் முறையில் பூமி பூஜை செய்து தொடக்கி வைத்தார். நாட்டின் ஒட்டுமொத்த வளர்ச்சியில், தொழிலக பாதுகாப்புப் படையினரின் பங்கு மிக முக்கியமானது என்றும், நாட்டின் பொருளாதார போர் வீரர்களாகவே, படையினர் செயல்பட்டு வருவதாகவும் அவர் தமது உரையில் கூறினார். தொழிலக பாதுகாப்புப் படைக்கான, பல்வேறு தொழில்நுட்ப மேம்பாட்டுத் திட்டங்கள், மற்றும், தொழிலக பாதுகாப்புப் படையினருக்கான பல்வேறு சமூக நலத் திட்டங்களையும் அமைச்சர் இவ்விழாவின்போது அறிவித்தார். தொழிலக பாதுகாப்புப் படையினர் மற்றும் அவர்தம் குடும்பத்தினருக்கு, மனநல ஆலோசனை வழங்க தனித்திட்டம் அமலாகி வருவதையும் அவர் பாராட்டினார்.

*ஷெகாவத் சுற்றுலா (10)*

சுற்றுலா மற்றும் விருந்தோம்பல் துறையில் வர்த்தகம் புரிவதை எளிதாக்குவது குறித்து, இத்துறையின் பிரதிநிதிகளுடன் புதுடெல்லியில் இன்று நடைபெற்ற கலந்துரையாடல் கூட்டத்தில், மத்திய சுற்றுலா மற்றும் கலாச்சாரத்துறை அமைச்சர் திரு. கஜேந்திர சிங் ஷெகாவத் கலந்து கொண்டார். சுற்றுலா மற்றும் விருந்தோம்பல் துறையின் மேம்பாட்டினால்,

பல கோடி மக்களின் வாழ்வாதாரத்தில் முக்கிய மாற்றங்களை கொண்டுவர முடியும் என்று, சமூக ஊடகப் பதிவு ஒன்றில் அமைச்சர் கூறியுள்ளார். பிரதமர் திரு. நரேந்திர மோடி தலைமையிலான அரசு, சுற்றுலா – விருந்தோம்பல் உள்ளிட்ட துறைகளில், புதிய வேலைவாய்ப்புகள் மற்றும் வளர்ச்சி வாய்ப்புகளை தொடர்ந்து உருவாக்கி வருவதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

*சிறுத்தை (11)*

குடியரசுத் தலைவர் திருமதி. திரௌபதி முர்மு, இன்று மத்தியப் பிரதேஷ் மாநிலம், ஷிவ்பூர் மாவட்டத்தில் உள்ள குனோ தேசிய பூங்காவில், சஹாரியா பழங்குடியினர், மற்றும், சீட்டா மித்ரா தொண்டர்களை சந்தித்து, பிராஜக்ட் சீட்டா என்னும் சிறுத்தைகள் மீட்டெடுப்புத் திட்டத்தில், இவர்களின் முக்கிய பங்களிப்பைப் பாராட்டினார். முன்னதாக, குனோ தேசிய பூங்காவை அவர் சுற்றிப் பார்த்து, சிறுத்தைகளுக்கான கட்டுப்பாட்டு மையத்தையும் பார்வையிட்டார். பிரதமர் திரு. நரேந்திர மோடி, கடந்த 2022ஆம் ஆண்டு, குனோ தேசிய பூங்காவில், பிராஜக்ட் சீட்டா திட்டத்தை தொடக்க வைத்ததும், தற்போது, இந்தியாவில் மொத்தமுள்ள 52 சிறுத்தைகளில், 49 சிறுத்தைகள் குனோ தேசிய பூங்காவில் இருப்பதும் குறிப்பிடத்தக்கது.

*தமிழ்நாடு சட்டமன்றம் -1 (2 )*

மேகதாதுவில் அணை கட்ட கர்நாடக அரசு முயல்வது குறித்து, தமிழக சட்டமன்றத்தில் இன்று விவாதம் மேற்கொள்ளப்பட்டது. இது குறித்து கூடுதல் விவரங்கள் …

(வாய்ஸ்)

*தமிழ்நாடு சட்டமன்றம் -2 (14)*

(வாய்ஸ்)

மேகதாது அணைத் திட்டத்தினால், காவிரி நீர் பகிர்வுப் பாதிக்கப்படும் என்றும், தமிழகத்திற்கு இழப்பும், கர்நாடகத்திற்கு ஆதாயமும் ஏற்படுவதாகவே இத்திட்டம் அமையும் என்றும் தமிழக சட்டமன்றத்தில் எதிர் கட்சிகள் கூறின. கர்நாடக அரசின் உத்தேசத்தை தமிழக அரசு எதிர்ப்பதாக, அரசு தரப்பில் அவையில் தெரிவிக்கப்பட்டது. தமிழகத்தின் நலன்களை பாதுகாக்கும் வகையில், மேகதாது நீர்த் தீர்ப்பாயம் அமைக்கக் கோரி, தமிழக சட்டமன்றத்தில் ஏகமனதாக தீர்மானம் நிறைவேற்றப் பட்டதையும், அரசு, அவையில் சுட்டிக் காட்டியது.

நீர்வளத்துறை அமைச்சர் திரு. ஆனந்த், விவாதங்களின் போது இடையிட்டுப் பேசுகையில், மேகதாது அணை குறித்த கர்நாடக அரசின் விரிவான திட்ட அறிக்கையை, மத்திய அரசு அங்கீகரிக்கக் கூடாது என வலியுறுத்தினார். விவசாயிகளின் முக்கிய பிரச்சனையான இந்த விவகாரத்தை, குடிநீர் பிரச்சனையாக மாற்றிக் காட்ட கர்நாடக அரசு முயல்வதாக, பொதுப்பணித்துறை அமைச்சர் திரு. ஆதவ் அர்ஜுனா குற்றம் சாட்டினார்.

*தமிழ்நாடு சட்டமன்றம் -3 (14)*

தமிழக சட்டமன்றத்தில், ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானம் மீது இன்று நடைபெற்ற விவாதங்களில், பிஜேபி உறுப்பினர் திரு. போஜராஜன் பங்கேற்றுப் பேசுகையில், பிரதமர் திரு. நரேந்திர மோடி, பல கோடி ரூபாய் மதிப்பிலான திட்டங்களை, தமிழகத்திற்கு வழங்கி இருப்பதாகப் பாராட்டினார். தமிழகத்தின் தேவைகளை மத்திய அரசிடம் எடுத்துக் கூறியதற்காக முதலமைச்சர் திரு. விஜய்-க்கும் அவர் பாராட்டுத் தெரிவித்துக் கொண்டார்.

நேற்று அமோனியா கசிவு சம்பவத்தில் உயிரிழந்தவர்களுக்கான அரசின் கருணைத் தொகை, 10 லட்சம் ரூபாயாக உயர்த்தப்பட வேண்டும் என, திமுக கொறடா திரு. ஏ.வ. வேலு கோரினார். அபாயகரமான தொழில்களை முறைப்படுத்த தனி கவுன்சில் அமைக்கப்படும் என்றும், தமிழக அரசு இன்று சட்டமன்றத்தில் அறிவித்தது.

இன்று முதலமைச்சர் திரு. விஜய்-யின் 53ஆவது பிறந்தநாளை ஒட்டி, கட்சி வித்தியாசம் இன்றி சட்டமன்ற உறுப்பினர்கள் பலரும் முதலமைச்சருக்கு வாழ்த்துத் தெரிவித்துக் கொண்டனர்.

*காரைக்கால் – ராஜசேகரன் (8)*

காரைக்கால் திருநள்ளாற்றில், இன்று நடைபெற்ற விழாவில், அமைச்சர் திரு. G.N.S ராஜசேகரன், 60 வயதுக்கு மேற்பட்ட முதியோர்களுக்கு, போர்வை மற்றும் காலணி வழங்கும் பணிகளை தொடக்கி வைத்தார். திருநள்ளாறு தொகுதிக்கு உட்பட்ட சுமார் 5 ஆயிரம் முதியவர்களுக்கு, இந்த உதவிகள் வழங்கப்பட உள்ளன. சமூக நலத்துறை உதவி இயக்குநர் திரு. சுந்தரம், மகளிர் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டுத்

துறையின், குழந்தைகள் நலத்திட்ட அதிகாரி திருமதி. கிருஷ்ணவேணி உள்ளிட்டோர் விழாவில் கலந்து கொண்டனர்.

*காரைக்கால் - போலியோ (8)*

வரும் 28ஆம் தேதி நடைபெற உள்ள பல்ஸ் போலியோ இயக்கம் குறித்து, காரைக்காலில், மாவட்ட ஆட்சியர் திருமதி. இஷிதா ராட்டி, இன்று அதிகாரிகளுடன் ஆலோசனைக் கூட்டம் நடத்தினார். சுகதாரத்துறை துணை இயக்குநர் டாக்டர் சிவராஜ் குமார் மற்றும் இதர அதிகாரிகள் இக்கூட்டத்தில் கலந்து கொண்டனர். காரைக்காலில், திருநள்ளாறு சனீஸ்வர பகவான் கோயில் உட்பட, 79 முக்கிய இடங்களில் போலியோ சொட்டு மருந்து மையங்கள் செயல்படும் என்றும், மாவட்டத்தில், 5 வயதுக்கு உட்பட்ட சுமார் 12 ஆயிரம் குழந்தைகளுக்கு சொட்டு மருந்து போடப்படும் என்றும் அரசு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

*ரயில்வே (10)*

ஒடிசா மற்றும் சுற்றுப் புற பிராந்தியங்களை உள்ளடக்கிய கிழக்கு கடலோர ரயில்வே மண்டலத்தில், மொத்தம் 631 கிலோமீட்டர் ரயில் பாதைகளில், கவச் என்னும் தானியங்கி ரயில் பாதுகாப்பு வசதிகளை நிறுவ, ரயில்வே துறை ஒப்புதல் அளித்துள்ளது. ஹரிதாஸ்பூர் – பராதீப், குர்தாரோடு – பலாங்கீர், பொப்பிலி – சாலூர் உள்ளிட்ட 6 முக்கிய ரயில்பாதைப் பிரிவுகளில், ரயில்கள் நேருக்கு நேர் மோதிக்கொள்ளும் வாய்ப்பை தடுக்கவும். ரயில்களின் இயக்கத்தில் பொதுவான பாதுகாப்பை அதிகரிக்கவும் இதனால் ஏதுவாகும் என்று அமைச்சக வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. நாட்டில் போக்குவரத்து நெரிசல் அதிகம் உள்ள ரயில்

பாதைப் பிரிவுகளில், கவச் வசதிகளை நிறுவ, மத்திய அரசு முக்கியத்துவம் அளித்து வருவதும் குறிப்பிடத் தக்கது.

*வானிலை (11)*

வளிமண்டல காற்றழுத்த தாழ்வுப் பாதை காரணமாக, இன்று தமிழகத்தில் ஒருசில இடங்களில், லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும் என சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. கோவை மாவட்ட மலைப் பகுதிகள், மற்றும், நீலகிரி, தேனி, திண்டுக்கல், மதுரை, குமரி உள்ளிட்ட மாவட்டங்களின் ஓரிரு இடங்களில், பலத்த காற்றுடன் கனமழை பெய்யக்கூடும் என்றும், டெல்டா மாவட்டங்கள் மற்றும் புதுச்சேரி – காரைக்கால் பகுதிகளில், பலத்த காற்றுடன் மிதமான மழை பெய்யக்கூடும் என்றும், வானிலை அறிக்கையில் தெரிவிக்கப் பட்டுள்ளது. வரும் 28ஆம் தேதி வரை மழை நீடிக்கலாம் என்றும் எதிர்பார்க்கப் படுகிறது. சூறாவளிக் காற்றுக்கு வாய்ப்பு அதிகம் உள்ள தமிழக கடலோரப் பகுதிகள், வங்கக் கடல் பகுதிகள், மற்றும், அரபிக் கடல் பகுதிகளுக்கு மீனவர்கள் செல்ல வேண்டாம் என அறிவுறுத்தப் பட்டுள்ளனர்.

*கால்பந்து (7)*

FIFA உலகக் கோப்பை கால்பந்துப் போட்டித் தொடரில், இந்திய நேரப்படி இன்று இரவு பத்தரை மணிக்கு, டல்லாசில் நடைபெறும் போட்டியில், ஆஸ்திரியா – அர்ஜெண்டீனா அணிகள் மோத உள்ளன. முன்னதாக, எகிப்து – நியூசிலாந்து அணிகளுக்கு இடையே, வான்கூவரில் நடைபெற்ற போட்டியில், எகிப்து அணி, 3க்கு- 1 என்ற கோல் கணக்கில்

வெற்றி பெற்றது. கேப் வெர்டே – உருகுவே அணிகளுக்கு இடையே, ஃபுளோரிடாவில் நடைபெற்ற போட்டி, டிராவில் முடிவடைந்தது.

*மோடி – பாவ□ா (6)*

தாத்ரா – நாகர் ஹவேலி, மற்றும், டாமன் – டையூ யூனியன் பிரதேச நிர்வாகி திரு. பிரபுல் பாய் படேல் மனைவி பாவனா பென் படேல் மறைவு குறித்து, பிரதமர் திரு. நரேந்திர மோடி துயரம் வெளியிட்டுள்ளார். படேல் குடும்பத்தினருடன் தமக்கு பல ஆண்டுகளாக நல்லுறவு உண்டு என்றும், பாவனா பென் படேல் மறைவினால் துயரம் அடைந்துள்ள குடும்பத்தினருக்கு ஆழ்ந்த இரங்கல் தெரிவித்துக் கொள்வதாகவும், சமூக ஊடகப் பதிவு ஒன்றில் பிரதமர் கூறியுள்ளார்.

*மீண்டும் தலைப்புச் செய்திகள்*

பிரிக்ஸ் நாடுகளின் தேசிய பாதுகாப்பு ஆலோசகர்களுக்கு இடையிலான 2 நாள் கூட்டம், புதுடெல்லியில் இன்று தொடங்கி உள்ளது.

தேசிய வேளாண் கூட்டுறவு விற்பனைக் கூட்டமைப்பின், ஏல நடைமுறைகளுக்கான இணையதளத்தை, மத்திய அமைச்சர் திரு. அமித் ஷா, நாளை தொடக்கி வைக்கிறார்.

மேகதாதுவில் அணை கட்ட கர்நாடக அரசு முயல்வது குறித்து, தமிழக சட்டமன்றத்தில் இன்று விவாதம் மேற்கொள்ளப்பட்டது.

காரைக்கால் திருநள்ளாற்றில், முதியோர்களுக்கு, போர்வை மற்றும் காலணி வழங்கும் பணிகளை, மாநில அமைச்சர் திரு. G.N.S ராஜசேகரன், இன்று தொடக்கி வைத்தார்.

இத்துடன் இந்த செய்தி அறிக்கை நிறைவு பெறுகிறது. RSS / MS / RK